[2014 ஜூலை 15

143—

சுற்றுலாத் தலம்

***18337—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசலை சுற்றுலாத் துறை மூலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, திருப்புனவாசல் சிவன் கோயில் பகுதியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட 2013-2014 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.27.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம், ரூ.17.95 இலட்சம் மதிப்பீட்டில் திருப்புனவாசல் கோயில் ரத வீதியை அகலப்படுத்துதல், ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டில் கல்யாண மண்டபம் சாலையை புதிய சிமென்ட் கான்கிரீட் சாலையாக அமைத்தல் மற்றும் ரூ.7.32 இலட்சம் மதிப்பீட்டில் விருத்தபுரீஸ்வரர் கோயிலைச் சுற்றி சிமென்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுட்டெரித்த சூரியனால் பட்டுப்போன தமிழகத்தை மூன்று வருடங்களுக்கு முன்பாக மீட்டெடுத்த முழு நிலா நீங்கள் அம்மா! கொடுத்து, கொடுத்து சிவந்த கரங்களுக்குச்*

2014 ஜூலை 15]

சொந்தக்காரர் நீங்கள் அம்மா! வள்ளலின் வாரிசு நீங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அட்சய பாத்திரம் நீங்கள் அம்மா! உங்களுடைய பொன்னான திருவடிகளை வணங்குவதில் நான் இறைவனால் கொடுத்துவைக்கப்பட்டவன் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே என்னால் எழுப்பப்பட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை வருவதற்கு முன்பாகவே—அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், திருப்புனவாசலில் மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்த பழம்பதி நாதர் திருக்கோயில் உள்ளது.—அங்கு வரும் பக்தர்களின் வசதிக்காக சுற்றுலாத் துறையின்மூலம் 27.97 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, கோயில் ரத வீதியை அகலப்படுத்தி, தார்ச் சாலையாக அமைக்கவும், கல்யாண மண்டப சாலையை புதிய சிமென்ட் கான்கிரீட் சாலையாக அமைக்கவும், விருத்தபுரீஸ்வரர் கோயிலைச் சுற்றி சிமென்ட் கான்கிரீட் சாலையாக அமைத்துத்தரவும் ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், அறந்தாங்கி தொகுதி மக்களின் சார்பாகவும், பழம்பதி நாதர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் செலுத்தி, நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புனவாசல் பழம்பதி நாதர் ஆலயத்திற்கு அருகிலும், திருப்பெருந்துறை ஆத்மநாதர் சுவாமி ஆலயத்திற்கு அருகிலும் அரசனரிப்பட்டினம் என்ற அழகிய கடற்கரை கிராமம் அமைந்துள்ளது. இந்த இடம் சென்னை மெரினா கடற்கரையைப் போன்று மிகவும் நீளமான, மணற்பாங்கான அழகிய கடற்கரைப் பகுதியாகும். எனவே, இந்த இடத்திற்குப் பொதுமக்கள் பொழுதுபோக்குவதற்காக அதிக அளவில் வந்து செல்வதால், இந்த இடத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்கால நல்லாட்சியில், சுற்றுலாத் தலமாக அறிவித்து, நிதி ஒதுக்கீடு செய்து, மேம்பாடு செய்து தருமாறு கேட்டு, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

144—

மீன்பிடித் துறைமுகம்

***7695—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS